1994 மார்ச் 31]

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய படி இந்த பழையாறு துறைமுகத்திற்கு முன்னுரிமை கொடுத்து பணிகள் ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அறிக்கை அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அளித்தல், திரு. வி. பி. சந்திரசேகர், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொதுப்பணித் துறையின் கட்டிடங்கள்" குறித்த 1989-90 ஆம் ஆண்டு மதிப்பீட்டுக் குழு அளித்த 4-வது அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை மீதான குழுவின் 14-வது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

4. அறிவிப்புகள்.

அ) முன்பண மானியக் கோரிக்கைகள், 1994-95, மொழிதல் (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1994-95 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் பேரவையில் மொழிவது குறித்து ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

'In pursuance of clause (2) of Article 20, read with clause (3) Article 203, of the Conseitution of India, I, M. Chenna Reddy, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for grants in advance, during the financial year 1994-95.'

5. முன்பண மானியக் கோரிக்கைகள், 1994-95— வாக்கெடுப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1994-95 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1994-95 ஆம் ஆண்டுக்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 30—3—1994 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் 2 ஆம் பத்தியில் குறிப்பிட்டுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகையை 1994-95 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்காக மொத்தமாக ரூபாய் 3,063,53,45,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு முன்பணமாக வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெறுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்).

மறுப்போர் இல்லை என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

நிறைவேற்றப்பெற்ற 1994-95 ஆம் ஆண்டு உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்.

கோரிக்கை.

		(ரூபாய் ஆயிரத்தில்)
A. வருவாய்க் கணக்கில் செலவு :		
1	நிலவரித் துறை	3,35,70
2	மாநில ஆயத் தீர்வைத் துறை	2,71,25
3	மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள் நிருவாகம்	4,55,19
4	பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம்	18,23,26
5	முத்திரைத் தாள்கள்—நிருவாகம்	1,13,77
6	பத்திரப் பதிவு	7,70,90
7	மாநிலச் சட்டமன்றம்	1,50,34
8	தேர்தல்கள்	1,08,16
9	மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் ..	22,57,53
10	பால் வழங்கு திட்டங்கள்	2,07,98
11	மாவட்ட நிருவாகம்	74,21,58

1994 மார்ச் 31]

A, வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி,

கோரிக்கை :

		(ரூபாய் ஆயிரத்தில்)
12	தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் ..	3,94,46
13	நீதி நிருவாகம்	18,37,80
14	சிறைச் சாலைகள் ..	9,18,11
15	காவல் துறை	1,29,06,38
16	தீயணைப்புப் பணிகள்	9,67,43
17	கல்வி	6,64,06,67
18	மருத்துவம்	1,22,69,87
19	பொதுச் சுகாதாரம்	83,30,64
20	வேளாண்மை	2,21,93,89
21	மீனளம்	8,25,49
22	கால்நடை வளர்ப்பு	29,62,34
23	கூட்டுறவு	19,38,35
24	தொழில்கள்	6,83,50
25	கைத்தறியும், துணித் தொழிலும் ..	36,12,54
26	கதர்-கிராமத் தொழில்கள்	3,62,59
27	ஊரக வளர்ச்சி	1,97,31,81
28	தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்	22,90,50
29	சமூக நலன்	1,58,93,37
30	பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்	50,25,77
31	பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன்	14,99,21
32	வீட்டு வசதி	9,00,84
33	நகர்ப்பகுதி வளர்ச்சி	11,64,59

[1994 மார்ச் 31

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

கோரிக்கை :	(ரூபாய் ஆயிரத்தில்)
34 நுகர்பொருள் வழங்கல்	1,76,99,21
35 பாசனம்	53,11,69
36 பொதுப் பணிகள்—கட்டிடங்கள் ..	2,68,83
37 பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும்	21,68,91
38 சாலைகளும், பாலங்களும்	93,59,59
39 சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்	4,63,18
40 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு—	13,57,38
41 ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்	2,01,22,25
42 பல்வகை	36,83,87
43 எழுதுபொருள்—அச்சுத்துறை	14,04,35
44 காட்டுவளத் துறை	16,39,06
45 இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்	18,59,65
46 செய்தி—திரைப்படத் தொழில் நுட்பவியல்	3,11,50
47 ஊரகத் தொழில்கள்	18,24,39
48 குடிநீர் வழங்கல்	67,80,46
49 நகராட்சி நிருவாகம்	2,56,04
50 சுற்றுலா	90,00
51 தமிழ் வளர்ச்சி—பண்பாடு	3,32,94
மொத்தம்—A. வருவாய்க் கணக்கில் செலவு ..	27,19,65,11

B. வருவாய்ச் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு—

கோரிக்கை :	(ரூபாய் ஆயிரத்தில்)
52 வேளாண்மை குறித்த மூலதனச் செலவு ..	4,60,25
53 தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு	8,22,03
54 பாசனம் குறித்த மூலதனச் செலவு ..	48,51,00
55 பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு	22,83,34
56 சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு—	30,72,58
57 சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு	7,08
58 காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு ..	13,13,58
59 ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு	31,87
60 பல்வகை மூலதனச் செலவு	16,35,74
மொத்தம்—B. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு	1,44,77,47

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்—

61 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்	1,99,10,87
பெரு மொத்தம்	30,63,53,45